தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழக கண்டுபிடிப்பு உத்திரபிரதேச மாநிலத்தில் அறிமுகம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக கண்டுபிடிப்பான "தானிய சேமிப்பில் ஏற்படும் பூச்சிகளை கண்டறிந்து கட்டுப்படுத்த உதவும் உபகரணங்கள் (பொறிகள்)" உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள காடியா கிராம (சித்தாபூர் மாவட்டம்) விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பூச்சியியல் துறையால் மத்திய வேளாண் ஆராய்ச்சி கழக உதவியுடன் நடத்தப்பட்ட வேளாண் ஆராய்ச்சியாளர்களுக்கான பயிற்சியில் உத்திரபிரதேச மாநிலத்தை சேர்ந்த வேளாண் ஆராய்ச்சி மைய விஞ்ஞானி டாக்டர். தயா.எஸ்.ஸ்ரீவாஸ்தவா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக கண்டுபிடித்த உபகரணங்களை பயன்பாட்டை பற்றி நன்கு அறிந்து பின்னர் தன் மாநிலத்திற்கு சென்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பொறிகளை உத்திரபிரதேச மாநிலம், காதிய கிராமம் சித்தாபூர் மாவட்டத்தில் உள்ள வேளாண் பெருமக்களிடையே அறிமுகப்படுத்தியுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக கண்டுபிடிப்புகள் உத்திரபிரதேச வேளாண்பெருமக்களிடம் நல்ல வரவேற்பு இருப்பதால் முதல்கட்டமாக 50 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பொறிகளை வேளாண் மக்களுக்கு வழங்கவுள்ளார்.

தானியங்களை சேமிக்கும் போது பூச்சிகளிடமிருந்து காப்பது அவசியமாதலால் பல்கலைக்கழகத்தின் இம்மாதிரியான முயற்சிகள் கண்டுபிடிப்புகளை இந்தியா முழுவதும் எடுத்துசெல்ல உதவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்